

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் தே.மு.தி.க. ஒன்றிய துணைச் செயலாளரும், மேல்மலையனூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவருமான சரவணன், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் மேல்மலையனூர் சங்கர், தாயனூர் ராஜ்குமார் ஆகியோர் தலைமையில் 500க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., தே.மு.தி.க,. அ.ம.மு.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் அக்கட்சியில் இருந்து விலகி மேல்மலையனூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் ஆகியோர் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.உடன் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கண்டன பொதுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் வி.பி.இராஜன், மாநில கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தலைமைக் கழகப் பேச்சாளர் குடந்தை இராமலிங்கம், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், நகர கழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில்! புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் - விராலிமலையில்

# மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - மன்னை சோம.இளங்கோவன் - அஞ்சுகம் பூபதி - தமிழினியன் சிறப்புரை!

### டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. - த.சந்திரசேகரன் - பங்கேற்பு! அ.இளங்குமரன் - மு.பி.ம.சத்தியசீலன், கே.பி.அய்யப்பன் வரவேற்புரை!

புதுக்கோட்டை, பிப். 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் விராலிமலை மேற்கு, கிழக்கு, மத்திய ஒன்றியங்கள் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் 8.02.2025 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் செக் போஸ்ட் விராலிமலையில். புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றியச் செயலாளர்கள் அ.இளங்குமரன், மு.பி.ம. சத்தியசீலன், கே.பி.அய்யப்பன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்.

கே.ஆர்.என்.போஸ், மு.பி. மணி, கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாஜலம், வை.விஜயகுமார், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், விழாபட்டி எம்.சிவகுமார், ஆர்.மூக்கையா, மா. செந்தில்குமார், நா.வீராச்சாமி, சி.சி. செல்வம், ரா.கோமதி ராஜேந்திரன், ஆர்.ராமசாமி, எம்.ரவிச்சந்திரன், சி. செல்வம், கோமதி மணிகண்டன், இரா.பாலசுப்பிரமணியன், கே.வி.கருப்பையா, என்.எஸ்.கே.நல்லதம்பி, நா.சி.பழனிச்சாமி, எம். பாண்டியன், ஏ.முத்துச்சாமி, பெ. கண்ணன், எஸ்.சுரேஷ், பெ.குமார், மு.பழனிச்சாமி, எம்.பி.ஜெயபால், கவிஞர் சௌமா, எம்.ஆர்.அன்பழகன், சு.சிவக்குமார், மா. பாலசுப்பிரமணியன், கே.ஜி.எஸ்.சுகி (எ) சுகுமாறன், எம்.செல்லத்துரை, ரெங்கராஜ், எம்.சுப்பையா, ஆ.ராஜா, சிவ.சண்முகம், எஸ்.பி.கண்ணன், வழக்கறிஞர் எம்.பாலமுருகன், ஆர். வித்யா ராஜேஷ், எல்.ஐ.சி வேலுச்சாமி, கே.ரெங்க ராஜ், எஸ்.ஏ.செல்வம், வாட்ச் ஆர்.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைசர் சிவ. வீ.மெய்யநாதன், மன்னை சோம.இளங்கோவன், துணை மேயர், விராலிமலை தொகுதி பார்வையாளர் அஞ்சுகம் பூபதி, தலைமை கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள்.

டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. த.சந்திரசேகரன், க.மதியழகன், பெ. ராஜேஸ்வரி, சு.சண்முகம், மு.க.இராமகிருஷ்ணன், வெ.முத்துகிருஷ்ணன், ஆர். ஆர்.சாமிநாதன், எம்.எம். பாலு, ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், கை.பழனிச்சாமி, அ.பிரபா, வே.ராஜேஷ், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, முகமது அன்சாரி பாசித், தெய்வானை, ராயல் சபா, தாயினிப் பட்டி கண்ணன், வி.என்.எம்.குமரேசன், உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன் நன்றி கூறினர்.

### நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையில்

# திருத்துறைப்பூண்டியில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - மதுரை சேவியர் பங்கேற்பு!

திருவாரூர், பிப். 11 -

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தலைமைக் கழக அறிவிப் பின்படி தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருத்துறைப்பூண்டி நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, தலைமைக் கழக பேச்சாளர் மதுரை சேவியர் உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆண்கள். பெண்கள் என ஆயிரக்கணக்கனோர் பங்கேற்ற இந்த கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் சிக்கந்தர் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அவைத் தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், மு. வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், எஸ்.ஜோதி ராமன், பா.பிரபாகரன், கேப்டன் செல்வராஜ், வே. மனோகரன், பால.ஞானவேல், கோ.தெட்சினாமூர்த்தி, வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், ஆர்.பாலச்சந்திரன், புலிவலம் ஏ.தேவா, சேகர் கலியபெருமாள், இரா. மனோகரன், ஐ.வி.குமரேசன், ப.பிரகாஷ்,டி.எஸ். டி.முத்து வேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி. கே.ஆனந்த்,நகர செயலாளர்கள் வாரை.பிரகாஷ், வீரா.கணேசன், எஸ்.வி.பக்கிரிசாமி , பா.சிவநேசன், வி.பக்கிரிசாமி, ஆர்.ராஜசேகர், ஏ.கே.டி.சேரன், சிவ. தியாகு , பூண்டி. கே. கலைவேந்தன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

நகர்மன்ற தலைவர்கள் கவிதா பாண்டியன், மும்தாஜ் நவஸ்கான், துணைத்தலைவர் ஆறுமுக சிவகுமார், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.என்.ராஜா, குன்னலூர் அன்பழகன், இரா.பிரபாகரன் மற்றும் துணை அமைப்பாளர்கள், கோ.தர்மராஜன், முகில் ராஜேந்திரன், என்.பி.பக்கிரிசாமி, ஆர்.எஸ்.சுந்தர், ஆர்.மணிமாறன், வி.சிதம்பரம், என்.ஜே.எஸ்.செல்லப்பா, வி.பன்னீர் செல்வம், டி.ஆர்.எஸ்.சக்திவேல், ஐ.ஜி.எஸ்.ஜாகிர் உசேன், டி.ரவி, மீனாகண்ணன், பி.செல்வமுத்துக்குமரன் உள்ளிட்ட நகர கழக நிர்வாகிகள், வி.பி.எஸ்.பாலகிருஷ்ணன், சேது.முருகானந்தம், எஸ்.பி.பாஸ்கர், கே.வீரமணி, எஸ்.ரவிச்சந்திரன், கவிதா நவநீதம், ஆர்.ஏ. தமிழ்ஜோதி உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, வார்டு மற்றும் கிளை கழக நிவாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

நகர இளைஞரணி அமைப்பாளர் வசந்த் நன்றி கூறினார்.



ஈரோடு நந்தா ஆர்ட் & சயின்ஸ் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வந்த செ.ஹரிகிருஷ்ணன் பி.காம், ச.பெரியசாமி பி.காம், சி.எஸ், (சி.ஏ) ஆகியோர் சாலை விபத்தில் மறைவடைந்ததையொட்டி அவர்களின் இல்லத்திற்கு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நேரில் சென்று அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக

# மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை! பி.வில்சன் எம்.பி. - வி.பி. கலைராஜன் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, பிப். 11-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும், எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து இன்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பர்கூர் சட்டமன்ற தொகுதி, போச்சம்பள்ளி பேருந்து நிலையம் அருகே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் “நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக் கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், மகேந்திரன், அறிஞர், நரசிம்மன், எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், குண.வசந்தரசு, தேங்காய் சுப்பிரமணி, கோவிந்தன், தனசேகரன் பேரூர் கழகச் செயலாளர தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் சாஜித், பார்த்திபன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த பொதுக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக தலைமை சட்ட ஆலோசகர், கழக மூத்த வழக்கறிஞர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக இலக்கிய அணி மாநில செயலாளர் வி. பி. கலைராஜன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் பேசிய வி. பி.கலைராஜன் ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்த நிதியும் ஒதுக்கவில்லை. குறிப்பாக 100 நாள் வேலை திட்டத்தில் கூலி உயர்த்திக் கொடுக்க வேண்டுமென கேட்டும் செவிசாய்க்காமல் உள்ளது. தமிழகத்துக்கு நிதிய ஒதுக்காமல் பா.ஜ.க. அவர்களும் மாநிலங்களுக்கு பல மடங்கு நிதியை தந்துள்ளார்கள் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது தமிழகத்திற்கு எண்ணற்ற திட்டங்கள் வழங்கப்பட்டது அந்த திட்டங்கள் தான் தற்போதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது அந்த திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்படவில்லை என அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகரும் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் பேசும் போது நாடாளுமன்றத்தில் நான் கேள்வி எழுப்பிய போது ஓராண்டுக்கு தென் மாநிலத்தில் உள்ள தமிழ்நாடு கேரளா கர்நாடகா தெலுங்கானா ஆந்திரா இந்த ஐந்து மாவட்டங்களில் மட்டும் எவ்வளவு வரி வசூல் ஒன்றிய அரசு பெற்றுள்ளது அதில் திரும்பி வழங்கப்பட்டது எவ்வளவு என கேள்வி எழுப்பினேன் அதற்குஇந்த ஐந்து மாநிலங்களில் இருந்து 22 லட்சத்தி 26 ஆயிரத்து 929 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டதாகவும் அதிலிருந்து இந்த ஐந்து மாநிலங்களுக்கு 6 லட்சத்து 91 ஆயிரத்து 375 கோடி ரூபாய் திரும்ப வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். இதை பார்த்தால் ஒரு ரூபாய் வசூலித்துக் கொண்டு வெறும் 26 பைசா மட்டும்தான் இந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கி உள்ளது. ஆனால் பா.ஜ.க. ஆளும் உத்தர பிரதேச மாநிலத்திற்கு ஒரு ரூபாய் வரி வசூல் செய்து கொண்டு இரண்டு ரூபாய் நிதி வழங்குகிறார்கள். தமிழகத்திற்கு ஒன்றிய அரசு நிதி வழங்காத போதிலும் இவ்வளவு நிதி சுமை இருந்தும் கூட தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டம் திட்ட மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார், பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம், தமிழகத்தில் உள்ள மகளிர்க்கு இலவச பேருந்து பயணத்திட்டம் என எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் என அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மாலதி நாராயணசாமி, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, கழகப் பிரமுகர் அன்பரசன் உள்ளிட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள், பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் அம்மன் ராஜா நன்றி உரையாற்றினார்.



நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்த மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகரும் மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி கலைராஜன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் கூட்டத்தில் மாவட்ட மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.